# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண். 265/பேரூ/2023
நாள். 31.10.2023

திரு. L. சண்முகம்,
சாணாம்புதூர்,
ஈரோடு மாவட்டம். ... மனுதாரர்

செயல் அலுவலர்,
வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சி ,
ஈரோடு மாவட்டம். .... எதிர்மனுதாரர்

ஈரோடு மாவட்டம், கொளாநல்லி அஞ்சல், சாணாம்புதூர், 20, மேற்குவீதி, என்ற முகவரியைச் சேர்ந்த திரு. L. சண்முகம், என்பவரது 24.08.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 28.08.2023 அன்று பெறப்பட்டு, 265/பேரூ/2023 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

ஆணை

ஈரோடு மாவட்டம், கொளாநல்லி அஞ்சல், சாணாம்புதூர், 20, மேற்குவீதி என்ற முகவரியைச் சேர்ந்த திரு. L. சண்முகம், என்பவர் தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

"2006 முதல் 2011 வரை வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சியின் துணைத்தலைவராகவும், 2011 முதல் 2016 வரை, 05 வது வார்டு உறுப்பினராகவும் மீண்டும் 2022ல் –05 வது வார்டு உறுப்பினராகவும் தேர்வு செய்யப்பட்டு பணியாற்றி வருகிறேன். 2022–2023 ஆம் ஆண்டு 15வது நிதி ஆணைய நிபந்தனை மானியநிதி (Untied Grant) திட்டத்தின் கீழ் சுமார் 3 இலட்சம் மதிப்பில் தனிநபர்கள் விவசாய வண்டிபாதையை பட்டா எண் 1500–ல் கான்கிரீட் தளம் அமைத்து பொதுமக்களுக்கு பயன்படாத வகையில் அரசு பணத்தை விரையம் செய்த செயல் அலுவலர் மீது

நடவடிக்கையும் கான்கிரீட் பணிக்கு செய்த செலவு தொகை தொடர்பாக விசாரணை மேற்கொள்ளும்படியும் கேட்டுக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 13.09.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

**3) வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சி செயல் அலுவலர் தனது 29.09.2023 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:-**

"வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சியில் 2022-2023ஆம் ஆண்டு 15வது நிதிக்குழு ஆணைய மானியம் (நிபந்தனையற்ற மானிய நிதி) (Untied Basic Grant)-ன் கீழ் (வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சியில் வார்டு எண். 08, பெரியூர் ஜானகி வீடு முதல் தங்கவேல் வீடு வரை சிமெண்ட் சாலை அமைத்தல் மற்றும் சண்முகம் ஆசிரியர் வீடு முதல் பழைய வடிகால் வரை, வார்டு எண்.01, வடுகனூர் வி.கே. சண்முகம் வீடு எதிர்புறம் முதல் பழைய வடிகால் வரை வடிகால் வசதி செய்தல்) பணியினை எடுத்து செய்யப்பட்டுள்ளது. மேற்படி சாலை, பேரூராட்சி அலுவலக சாலைப்பதிவேடு பேரூராட்சிகளின் இயக்குநரக தனித்துவமான குறியீடு எண்.DTP124107006ன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், பேரூராட்சி சார்பாக எடுத்து செய்யப்படும் சாலை திட்டப்பணிகள் அனைத்தும், சம்பந்தப்பட்ட பேரூராட்சியின் சாலை பதிவேட்டில் பதிவேற்றம் செய்து தனித்துவ குறியீடு அடிப்படையில் எடுத்து செய்யப்படல் வேண்டும்.

மேலும்,09.03.2023ம் தேதிய மன்ற கூட்டத்தில் 2022-2023ம் ஆண்டு 15வது நிதிக்குழு ஆணைய மானியம் முதல் தவணை (நிபந்தனையற்ற மானியநிதி) (Untied Basic Grant)-ன் கீழ், பணிக்கான ஒப்புதலுக்கு பொருள் சேர்க்கப்பட்டு 09.03. 2023 அன்று நடைபெற்ற மன்ற கூட்டத்தில் தீர்மானம் ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேற்படி கூட்டத்தில் இப்புகாரின் மனுதாரரான, திரு L. சண்முகம் 5வது வார்டு உறுப்பினர் கலந்து கொண்டுள்ளார். இத்தீர்மானம் நிறைவேற்றும் பொழுது மனுதாரர் எவ்வித ஆட்சேபனையும் பதிவு செய்யவில்லை. சம்பந்தப்பட்ட வார்டு பொதுமக்களும் எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை. மன்றத் தீர்மான எண். 20(07)/2023 நாள் 09.03.2023த்தின் படி தேர்வு செய்யப்பட்ட பணிகளுக்கு அங்கீகாரம் பெறப்பட்டு நிர்வாக அனுமதிக்கு கருத்துரு அனுப்பப்பட்டு, பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை அவர்களின் நடவடிக்கைகள் நக.எண். 4759/2023/02 நாள் 22.05.2023ன்படி நிர்வாக அனுமதி மற்றும் உதவி செயற்பொறியாளர் ஈரோடு அவர்களின் தொழில்நுட்ப எண். 127/23-24 நாள் 26.05.2023ன்படி தொழில்நுட்ப அனுமதி பெற்று சாலை அமைக்கப்பட்டுள்ளது.

ஒப்பந்தப்புள்ளி தொடர்பாக அரசாணையில் தெரிவித்துள்ள நிபந்தனைகள் மற்றும் அறிவுரைகளின் அடிப்படையிலும், மதிப்பீட்டின்படியும், இளநிலைபொறியாளரின் நேரடி பார்வையிலும் ஈரோடு உதவி செயற்பொறியாளரின் மேற்பார்வையிலும் பணி செய்து முடிக்கப்பட்டுள்ளது. அரசு விதிகளின்படியே பணிகள் தேர்வு செய்யப்பட்டு மதிப்பீட்டின்படியே சாலை அமைக்கப்பட்டுள்ளது "என்று தெரிவித்துள்ளார்.

(4) மனுதாரரும் மற்றும் எதிர்மனுதாரான வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சி செயல் அலுவலரும் 11.10.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 04.09.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) 11.10.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் மனுதாரர் திரு L. சண்முகம் என்பவர்ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:-

"வெள்ளோட்டம்பரப்பு பேரூராட்சியில் 2022–23ஆம் ஆண்டு 15வது நிதி ஆணைய மானிய நிதி திட்டத்தின் கீழ் சுமார் 3 இலட்சம் ரூபாய் மதிப்பில் தனிநபர்கள் விவசாய நிலத்தை கான்கிரீட் தளம் அமைத்து பொதுமக்களுக்கு பயன்படாத வகையில் அரசு பணத்தை விரையம் செய்த பேரூராட்சி செயல் அலுவலர் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று இம்முறைமன்ற நடுவத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் எனது 24.08.2023 நாளிட்ட புகார் மனுவில் தெரிவித்துள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறைமன்ற நடுவத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6) எதிர்மனுதாரான வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சியின் செயல் அலுவலர் திரு. R. விஜயன் என்பவர் 14.08.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தமது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:-

"வெள்ளோட்டம்பரப்பு பேரூராட்சியில் 2022–2023ஆம் ஆண்டு 15வது நிதிக்குழு ஆணைய மானியம் (நிபந்தனையற்ற மானிய நிதி) (Untied Basic Grant)–யின் கீழ் (வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சியில் வார்டு எண்.08, பெரியூர் ஜானகி வீடு முதல் தங்கவேல் வீடு வரை சிமெண்ட் சாலை அமைத்தல் மற்றும் சண்முகம் ஆசிரியர் வீடு முதல் பழைய வடிகால் வரை, வார்டு எண்.01, வடுகனூர் வி.கே.சண்முகம் வீடு எதிர்புறம் முதல் பழைய வடிகால் வரை வடிகால் வசதி செய்தல்) பணிகள் எடுத்து செய்யப்பட்டுள்ளன. மேற்படி சாலை எண்.DTP124107006ன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. 09.03.2023ஆம் தேதிய மன்றக்கூட்டத்தில் 2022–2023ம் ஆண்டு 15வது நிதிக்குழு ஆணைய மானியம் முதல் தவணை (நிபந்தனையற்ற மானிய நிதி) (United Basic Grant) –ன் கீழ், பணிக்கான ஒப்புதலுக்கு பொருள் சேர்க்கப்பட்டு 09.03.2023 அன்று நடைபெற்ற மன்றக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேற்படி சாலை தொடர்பாக வருவாய்த் துறை ஆவணங்களை ஆய்வு செய்தபொழுது சர்வே எண்.372(17)ல் 0.02.0 ஹெக்டேர் ஏர்ஸ் (அ) 114 மீ மண் நிலமானது (1) திரு.ரா.கொழுந்தையணக்கவுண்டர் (2) திரு. வே.சொங்கப்பகவுண்டர் (3) திரு.அருணாசலக்கவுண்டர் என்ற மூன்று நபர்கள் பெயரில் உள்ளது. நிலம் பயன்பாடு பாதை என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி நில உரிமைதாரர்களில் வரிசை எண்.1 மற்றும் 2ல் உள்ள நபர்கள் தற்பொழுது உயிருடன் இல்லை. மீதம் உள்ள திரு.அருணாச்சலகவுண்டர் என்பவர் தனது பேரனுக்கு சொத்துக்களை எழுதி வைத்துள்ளார். மேற்படி நபரின் பேரன் திரு.வெங்கடாசலம் த/பெ. தர்மலிங்கம், 4 மெயின் வீதி, சாணாம்புதூர், திரு.சண்முகம் த/பெ. கந்தசாமிகவுண்டர், 20, மெயின் வீதி, பெரியூர் மற்றும் திரு.துரைசாமி த/பெ. பெரியணகவுண்டர், 21, மெயின் வீதி,

பெரியூர் ஆகிய மூவரும் தங்களுக்கு பாத்தியப்பட்ட மேற்படி மண் சாலையை, கான்கிரீட் சாலையாக அமைப்பதற்கு மன்ற தலைவர் அவர்களிடம் விண்ணப்பக் கடிதம் மற்றும் ஒப்புதல் அளித்ததன் அடிப்படையிலேயே பேரூராட்சி மன்ற கூட்டத்தில் இப்பணி தேர்வு செய்யப்பட்டுள்ளது. மேற்படி சாலையின் இருபுறமும் வீடுகள் உள்ளன. இச்சாலையின் வழியாக விவசாய நிலங்களுக்கு அருகாமையில் உள்ள பெரியூர் ஆதி திராவிடர் காலனி பொதுமக்கள் வேலைக்கு சென்று வருகின்றனர்.

மேற்படி தீர்மானம் நிறைவேற்றும்பொழுது மனுதாரர் எவ்வித ஆட்சேபனையும் பதிவு செய்யவில்லை. சம்பந்தப்பட்ட வார்டு பொதுமக்களும் எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை. மன்றத்தீர்மான எண்.20(07)/2023 நாள் 09.03.2023ன்படி தேர்வு செய்யப்பட்ட பணிகளுக்கு அங்கீகாரம் நிர்வாக அனுமதிக்கு, பேரூராட்சிகளின் இயக்குநர் சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி பெற்று சாலை அமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசின் ஒப்பந்தப்புள்ளி அரசாணையில் தெரிவித்துள்ள நிபந்தனைகள் மற்றும் அறிவுரைகளின் அடிப்படையிலும், மதிப்பீட்டின்படியும் இளநிலைப்பொறியாளரின் பார்வையிலும், உதவி செயற்பொறியாளர், ஈரோடு அவர்களின் மேற்பார்வையிலும் பணி செய்து முடிக்கப்பட்டுள்ளது. அரசு விதிகளின்படியே பணிகள் தேர்வு செய்யப்பட்டு மதிப்பீட்டின்படியே பொதுமக்களின் நலன்கருதி நல்லெண்ணத்தின் அடிப்படையில் சாலை அமைக்கப்பட்டுள்ளது என்பதை இம்முறைமன்ற நடுவத்தின் முன் பதிவு செய்கிறேன்.

மேலும் 09.10.2023 நாளிட்ட எனது கடிதத்தில் தெரிவித்துள்ள விவரங்களையும் எனது மேல்வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறைமன்ற நடுவத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**7) மனுதாரரின் புகார் மனு மற்றும் அவரது வாக்குமூலம், வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை, அவரது வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.**

ஈரோடு மாவட்டம், சாணாம்புதூர், என்கிற இடத்தைச் சார்ந்த மனுதாரர் திரு.T.சண்முகம் என்பவர் தனது 24.08.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில் வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சிக்குட்பட்ட பட்டா எண்.1500ல் தனிநபர்களுக்கு சொந்தமான விவசாய வண்டிப்பாதையில் ரூ. 3 இலட்சம் மதிப்பீட்டில் பொதுமக்களுக்கு பயன்பாடாத வகையில் கான்கிரீட் தளம் அமைத்து பேரூராட்சியின் மூலம் அரசு பணத்தை விரையம் செய்யப்பட்டுள்ளது என புகார் தெரிவித்துள்ளார்.

வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சியால் 2022-23ஆம் ஆண்டு 15வது நிதிக்குழு ஆணைய மானிய நிதித்திட்டத்தின்கீழ் புல எண். 372(17)ல் பேரூராட்சியால் பராமரிக்கப்படும் சாலைப்பதிவேட்டில் "பயன்பாடு பாதை" என வகைப்பாட்டில் உள்ளதை அடிப்படையாகக் கொண்டு ரூ. 3 இலட்சம் மதிப்பீட்டில் தனிநபர்களுக்கு சொந்தமான மண்சாலையை கான்கிரீட் சாலையாக அமைப்பதற்கு பேரூராட்சி மன்றத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டும் மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநரின் நிர்வாக அனுமதி பெறப்பட்டும் ஒப்பந்தப்புள்ளி மூலமும் கான்கிரீட் சாலை அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு கான்கிரீட் சாலை அமைக்கப்பட்டதற்கு வெள்ளோட்டாம்பரப்பு

பேரூராட்சி மன்ற உறுப்பினரும் மற்றும் மனுதாரருமாகிய திரு. L.சண்முகம் என்பவர் நகர்மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டபோது எவ்வித எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை என பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். இருப்பினும், வருவாய் ஆவணங்களின்படி மனுதாரர் புகாராக தெரிவிக்கும் புல எண் 327(17)ல் 114 மீட்டர் பரப்பளவில் உள்ள மண் நிலமானது 1. திரு. ரா.கொழந்தையணக் கவுண்டர், 2. திரு. வே. சொங்கப்ப கவுண்டர் மற்றும் 3. திரு.அருணாசலக் கவுண்டர் என்கிற மூன்று நபர்களின் பெயரில் பயன்பாடு சாலை என்கிற வகைப்பாட்டில் உள்ள நிலையில், பேரூராட்சி செயல் அலுவலர் இதனை கவனத்தில் கொள்ளாமல், பேரூராட்சியால் பராமரிக்கப்படும் சாலைப்பதிவேட்டின் அடிப்படையில், விதிகளுக்கு புறம்பாக சிமெண்ட் சாலை அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. இவ்வாறு விதிமீறி சட்டத்திற்கு புறம்பாக பொறுப்பற்ற முறையில் பணியாற்றியுள்ள வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சி செயல் அலுவலரின் செயலினை இம்முறைமன்றம் வன்மையாகக் கண்டிக்கிறது.

எனினும் மேற்கண்ட நில உரிமையாளர்களில் ஒருவரான திரு. அருணாசலக் கவுண்டர் தனது பேரனுக்கு சொத்துக்களை எழுதி வைத்துள்ள நிலையில் அவரது பேரனும் மேற்காணும் தங்களது இடத்தில் சிமெண்ட் சாலை அமைத்தற்கு சம்மதம் தெரிவித்து கடிதம் அளித்துள்ளார். மேலும் நில உரிமையாளர்களில் மற்ற இரண்டு நபர்கள் தற்போது காலமாகிவிட்டதாக செயல் அலுவலர் அறிக்கை மூலம் தெரிய வருகிறது.

இந்நிலையில் பேரூராட்சி செயல் அலுவலர் இம்முறைமன்றத்தில் விசாரணை நடைபெற்றபோது புகாருக்குள்ளான புல எண். 327(17) இடத்தில் பேரூராட்சியால் சிமெண்ட் சாலை அமைத்ததற்கான சம்மதத்தை உரிய நில உரிமையாளர்களிடமிருந்து 15 நாட்களுக்குள் பெற்று, எதிர்காலத்தில் பேரூராட்சிக்கு எவ்வித நிர்வாக இடையூறும் ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்த நிலையில் மனுதாரர், திரு L. சண்முகம் என்பவரும் விதிகளுக்கு முரணாக இல்லாமல் சட்டப்படி சாலை அமைக்கப்பட்டால் தனக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை எனவும் விசாரணையில் தெரிவித்துள்ளார்.

மேற்காணும் சூழ்நிலையில் புல எண். 327(17) இடத்தின் நிலஉரிமையாளர்களிடம் பேரூராட்சியால் பொதுநலன் கருதி சிமெண்ட் சாலை அமைக்கப்பட்டதற்கான சம்மதம் பெறப்பட்டு அதன் அறிக்கையை இம்முறைமன்ற நடுவத்திற்கு 45 நாட்களுக்குள் அனுப்பி வைக்குமாறு வெள்ளோட்டம்பரப்பு பேரூராட்சி செயல் அலுவலரை அறிவுறுத்த இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

மேலும் எதிர்காலத்தில் இதுபோன்று சட்டவிதிகளை மீறி செயல்படாமல் எவ்வித புகாருக்கும் இடம் அளிக்காத வகையிலும், பொறுப்புடனும் பணியில் செயல்படுமாறு வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சி செயல் அலுவலரை அறிவுறுத்தி இம்முறை மன்ற நடுவம் ஆணையிடுகிறது.

The Director of Town Panchayat is directed to sensitize the Assistant Directors/ Executive Officers of the Districts on the issue of taking pre-cautionary steps before embarking upon roads, drains or any other utility on patta lands to avoid litigations, complaints and disputes. Consent letters should be obtained besides observing the

necessary formalities as per standard procedure and protocol. If Courts Order compensation and penalty it would be a drain on the finances of the Town Panchayats. The indifferent attitude of the delinquent officials in this issue is condemned by this Forum.

2023–ஆம் ஆண்டு, அக்டோபர் 31–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. L. சண்முகம்,
5வது வார்டு உறுப்பினர்,
வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சி,
20, மேற்குவீதி, சாணாம்புதூர்,
கொளாநல்லி அஞ்சல்,
ஈரோடு மாவட்டம். 638 154

2) செயல் அலுவலர்,
வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சி ,
ஈரோடு மாவட்டம்.

3) பேரூராட்சிகளின்இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி நகர், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
(பெயரிடப்பட்ட உரையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை –600 028.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்

06/11/2023